பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 10 2025 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நடவடிக்கைகளால் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
- பசும்பொன்னில் நடைபெறும் முத்துராமலிங்க தேவரின் பிறந்த தின நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பங்கேற்கிறார்.
- நாட்டின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கு சர்தார் வல்லபாய் பட்டேல் பெரும் பங்களித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணிகளில் சுமார் 77 ஆயிரம் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.
- உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நடவடிக்கைகளால் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இதுபோன்ற மகத்துவமான நடவடிக்கை உலகில் வேறெந்த நாடுகளிலும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 118வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் இன்று காலை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் மரியாதை செலுத்துகிறார்.

முன்னதாக நேற்று மாலை அவர் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் தரிசனம் செய்தார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அமைச்சர்கள் உள்ளிட்டோரும் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் நினைவிடத்தில் இன்று மரியாதை செலுத்துகின்றனர்.

முத்துராமலிங்க தேவரின் குருபூஜையும் இன்று நடைபெறுகிறது.

முன்னதாக இவ்விழாவில் பங்கேற்க மதுரை சென்ற முதலமைச்சர், அங்குள்ள சுற்றுலா மாளிகையில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை நேற்று சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

மக்கள் அனைவரும் சகோதர சகோதரிகளாக ஒற்றுமையுடன் வாழவும், நீடித்த எதிர்காலத்திற்கு வழிகாட்டியவராகவும் திருவள்ளுவர் திகழ்ந்தார் என்று ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

கன்னியாகுமரியில் இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், நேற்று மாலை சுவாமி விவேகானந்தர் நினைவுப் பாறையில் தியானம் மேற்கொண்டார்.

பின்னர் திருவள்ளுவர் சிலைக்கு கண்ணாடிப் பாலம் வழியாக சென்ற அவர், அங்குள் வருகைப் பதிவேட்டில் எழுதினார்.

மகான் கவிஞர் திருவள்ளுவரின் ஞானம் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தும் என்றும், அவரது உபதேசங்களை நாம் மனதில் கொண்டு பின்பற்றி வாழ்வோம் என்று அதில் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150வது பிறந்த தினத்தையொட்டி புதுதில்லி ஆகாஷ்வாணி நிலையம் சார்பாக நடைபெற்ற ஆண்டு நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொண்டார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நமது நாட்டை ஒருங்கிணைப்பதில் இரும்பு மனிதரின் இணையற்ற பங்களிப்பு குறித்து தாம் நினைவுகூர்ந்ததாக கூறியுள்ளார்.

ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உத்வேகத்தை வளர்ப்பதற்கும், நாட்டின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்குமான அவரது தொலைநோக்குப் பார்வையை நாம் முன்னெடுத்துச் செல்வோம் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாடு அரசுப் போக்குரவத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய மாற்றுத்திறனாளிகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ் அறிஞர்கள் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டை டிசம்பர் மாதம் வரை செல்லுபடியாகும் என்று போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகள் இந்த கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை இணையதளம் வழியாக பெறும் வகையில் மென்பொருள் உருவாக்கம் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவதாக கூறப்பட்டுள்ளது.

இதனை முழுமையாக செயல்படுத்த மாவட்ட அளவில் முகாம்கள் நடத்த வேண்டியுள்ளதால் இந்த கட்டணமில்லா பேருந்து பயண அட்டை செல்லுபடி காலம் மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணிகளில் சுமார் 77 ஆயிரம் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலக மேற்பார்வையாளர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இவர்களுக்கு கணக்கெடுப்பு குறித்த பயிற்சி மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் நடத்தப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் ஒரு லட்சத்து 98 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நடப்பாண்டில் இதுவரை 300 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டள்ளதாக கூறினார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

தென்கொரியாவின் Busan நகரில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், சீன அதிபர் திரு. ஸீ ஜின் பிங்-கை இன்று சந்தித்துப் பேசுகிறார்.

<<<<>>>>

அரசு நிதியை தவறாகப் பயன்படுத்தியது குறித்த வழக்கில் ஜனவரி 28ஆம் தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று இலங்கை முன்னாள் அதிபர் திரு. ரணில் விக்ரமசிங்க-வுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ரஃபேல் போர் விமானத்தில் பயணித்ததன் மூலம் நாட்டின் ராணுவ திறன் மீதான தமது நம்பிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் வானிலை முன் கணிப்பு மற்றும் பேரிடர் தயார்நிலை உட்கட்டமைப்பை வலுப்படுத்துவது குறித்து முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுகு, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் உடன் விவாதித்தார்.

<<<<>>>>

உலகளாவிய எரிசக்தி தேவையில் அடுத்த 20 ஆண்டுகளில் சுமார் 30 சதவீதம் அளவிற்கு இந்தியாவின் பங்களிப்பு இருக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வர்த்தக நிலக்கரி சுரங்கத்தின் 14வது சுற்று ஏலத்தை நிலக்கரி அமைச்சகம் தொடங்கியுள்ளது.

<<<<>>>>

Montha புயல் காரணமாக ஆந்திரப்பிரதேசத்தில் 87 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிற்கு பயிர்கள் சேதமடைந்துள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பூடான் அரசு மருத்துவமனைகளில் செவிலியராக பணிபுரிய விரும்புவோர் வரும் 3ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

கடலூர் மாவட்டம் மங்களூர் கிராமத்தில் விஷப் பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 3 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

நவி மும்பையில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை 3 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் தென்னாப்பிரிக்கா 125 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

<<<<>>>>

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியின் மல்யுத்தப் பிரிவில் இந்தியாவின் ஜெய்வீர் சிங், மோனி ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.

பஹ்ரைனில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப் பிரிவு இறுதிச்சுற்றில் ஜெய்வீர் சிங், ஜப்பானின் Yamato Furusawa-வை 6-2 என்ற புள்ளிக் கணக்கில் வென்று இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மகளிர் 57 கிலோ எடைப் பிரிவு இறுதிச்சுற்றில் மோனி, கிர்கிஸ்தானின் Sezim-ஐ 10-0 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி தங்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம், 11 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<>>>>

சென்னை ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா - ருத்துஜா போஸ்லே இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் ஸ்லோவேனியாவின் தலிலா - நிகா இணையை வென்றது.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் - மாயா ராஜேஷ்வரன் ரேவதி இணை 6-2, 1-6, 10-7 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் அமீனா அன்ஷ்பா - இங்கிலாந்தின் ஈடன் சில்வா இணையை வென்றது.

**<<<<>>>>**